Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# அஷ்டபதி - ஓர் ஆய்வு

25

**ச.ரம்யா & முனைவர் அம்பிகா காமேஷ்வர்**
**இசைத்துறை, முனைவர் பிரிவு,**
**வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை- 600117.**

**ஆய்வு நோக்கம்**

கர்நாடக சங்கீதம் பதிகங்கள், பாசுரங்கள், சந்தப்பாக்கள், கீர்த்தனைகள், கிருத்திகள் பல்வேறு வகையான இசை வகைகளை கொண்டது. இவ்வாறாக கிருத்திகள் கீர்த்தனைகள் மட்டுமல்லாது பஜனை சம்பிரதாய பாடல்களும் உலக அளவில் புகழ் பெற்றுள்ளது. அத்தகைய பாடல்களைச் சார்ந்ததே அஷ்டபதி என்ற பாடல் வகையும். அத்தகைய அஷ்டபதிகளை பற்றிய எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வாகும்.

**திறவுச்சொற்கள்**

அஷ்டபதி, ஜெயதேவர், கீத கோவிந்தம், பக்தி, பிரேமை, பாடல்கள்

**ஆய்வின் சுருக்கம்**

இந்திய இசை வரலாற்றில் 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பஜனை சம்பிரதாயத்தை சார்ந்த இசை வடிவமே அஷ்டபதி ஆகும். ஜெயதேவரின் கீத கோவிந்தம் இவ்வகையானது. இந்த இசைக் காவியத்தை ஜெயதேவரின் அஷ்டபதி எனவும் அழைப்பார்கள். அந்த கீத கோவிந்தம் அஷ்டபதியையும், அதைப் போன்றே மற்றும் பலராலும் இயற்றப்பட்ட பல அஷ்படதிகளையும் எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**முன்னுரை**

நமது பாரதநாட்டின் இசை வரலாற்றில் சங்கீதமும் பக்தியும் பிரிக்க முடியாதபடி ஒன்று கலந்தே சிறந்து விளங்கியது. இசையை பக்தியின் வெளிப்பாடாக கலந்து பாடப்படும்போது கேட்பவரை மெய்மறக்கச் செய்யும். இவ்வாறாக ஆண்டாள், பக்த மீரா போன்ற பக்தர்கள் தாங்கள் ஸ்ரீகிருஷ்ணர் மீது கொண்ட பிரேமையை பக்தி பாடல்களாக இயற்றியளித்தனர். அப்படியாக ஸ்ரீ ராதாதேவி கிருஷ்ணனின் மீது கொண்ட பிரேமையையும் பக்தியையும் விவரிக்கும் பாடல்களே ஜெயதேவரால் இயற்றப்பட்ட கீத கோவிந்தமாகும்.

**அஷ்டபதி**

முதல் முதலில் அஷ்டபதி என்ற வகையை இசை உலகிற்கு உருவாக்கி தந்தவர் ஒரிசா மாநிலத்தில் வாழ்ந்த ஸ்ரீ ஜெய தேவர் ஆவார். (1) கஜெயதேவர் மிகச்சிறந்த கிருஷ்ண பக்தராவார். இவரின் பக்தியின் உச்சத்தை தன் கீத கோவிந்தம் என்னும் அஷ்டபதிகளில் வெளிக்காட்டியுள்ளார். கோவிந்தனைப் பற்றிய கீதம் என்பதால் கீத கோவிந்தம் என அழைக்கப்படுகின்றது. அஷ்டபதி என்பது பல்லவியும் அதை தொடர்ந்து எட்டு பத்திகளை கொண்ட பாடல் வகையாகும். கீத கோவிந்தம் ஸ்ரீ கிருஷ்ணர் ராதையின் பிரேமையை எடுத்துக்காட்டும் சமஸ்கிருத பாடல்களாகும். இந்நூல் பக்தி இலக்கியத்தின் சிறந்த நூலாக திகழ்கிறது. (2) இந்நூல் இந்திய இசை வரலாற்றில் ஏறக்குறைய 200 வருடங்களுக்கு முந்திய சங்கீத முறையை விளக்குகிறது. சாரங்கதேவருடைய சங்கீதரத்னாகரத்துக்கும் முற்பட்ட இசையினை காட்டுவதாக உள்ளது. (3)

**நூல் வடிவம்**

இந்நூல் 12 ஸர்க்கங்களை கொண்டதாகும். அவை ஒவ்வொன்றும் பிரபந்தம் எனப்படுகிறது. கீத கோவிந்தம் மொத்தமாக 24 பாடல்கள் கொண்டது. ஒவ்வொரு பாடலும் எட்டு ஈரடிப்பாக்களை கொண்டிருக்கும். இப்பாடல்கள் பக்தி ரஸமும், இசைச்செறிவும், நர்த்தனத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளதால் நாட்டியங்களிலும், இசை கச்சேரிகளிலும் இன்றளவும் பாடப்பட்டுகிறது. இந்த அஷ்டபதி பாடல்களில் ஆரம்பத்திலும் முடிவிலும் பல ஸ்லோகங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. (4) நாம் பரமாத்மாவிடமிருந்து பிரிந்து மனிதனாக பூமியில் வந்து ஜனித்த, மூப்பு, பிணி, பசி போன்ற பல துன்பங்களை அனுபவிக்கிறோம். அந்த இறைவனின் அருளால் நல்ல ஆசாரியரால் அரிய உபதேசங்களைப் பெற்று, மீண்டும் இறைவனிடம் சேர்க்கிறோம் என்பதை இப்பாடல்கள் கூறுகின்றன. கிருஷ்ணன் பரமாத்மா, ராதை ஜீவாத்மா, ஸகி ஆசார்யன் என்பதாக இப்பாடல்கள் அமைந்துள்ளது.

மருதாநல்லூர் ஸ்வாமிகளால் நாடு முழுவதுமுள்ள மஹான்கள் இயற்றிய பக்திப் பாடல்கள் திரட்டப்பட்ட போது, அவர் ஜெயதேவரின் அஷ்டபதிகளையும் சம்பிரதாய பஜனையோடு சோர்த்து அளித்தார். இன்று பல இடங்களில் ஜெயதேவரின் அஷ்டபதிகளை கொண்டே ராதா கல்யாணம் நிகழ்தப்படுகிறது. (5) இவ்வாறாக மேலும் சிவ கீதிமாலா, கீத சுந்தரம், கீத ராகவம், கீத காங்கேயம் என்பதாக மேலும் சில

அஷ்டபதிகளும் காணப்படுகின்றன. அவற்றை தொடர்ந்து காணலாம்.

**சிவ கீதி மாலா**

சிவ கீதி மாலா என்று அழைக்கப்படும் இந்த அஷ்டபத்தியை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 62 வது பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி அவர்கள் இயற்றியுள்ளார். இவ்வஷ்டபதி 20 பாடல்களை கொண்டது. இந்நூல் விநாயகப் பெருமானின் வழிபாட்டுடன் தொடங்குகிறது. சிவபெருமானை சக்திதேவியின் வடிவான பார்வதி அடைவதை கருபொருளாக கொண்டுள்ளது. சக்தியான தாக்ஷாயினி தேவியை பிரிந்ததால் சிவபெருமான் அடைந்த விரகத்தையும், பின் சக்தியே பார்வதியாக கம்பா நதிக்கரையில் சிவபெருமானை அடைய கடுமையான தவம் மேற்கொண்டதையும், பின் பார்வதியின் தோழி மூலமாக தேவியின் தவத்தை சிவ பொருமான் அறிய, பின் பல உணர்வுப்பூர்வமான நிகழ்வுக்கு பின் சிவபார்வதியின் திருமணம் முடிந்து இருவரும் ஏகாம்பரேஷ்வரராகவும், காமாக்ஷியாகவும் காட்சி தருவதாகவும் இப்பாடல்கள் அமைந்துள்ளது. இறைவனாக இருப்பினும் அவரின் ஜீவாத்மா பிரேமையால் பரமாத்மாவை அடையும் வரை அனுபவிக்கும் பிரிவின் துயர், வருந்துதல், மனத்தின் துக்கத்தால் மற்றவை அனைத்தையும் கைவிடுதல், குற்ற உணர்வு, இறுதியில் அனைத்தையும் துறந்து அவனே எல்லாம் என்றுணர்ந்து இனையும் மகிழ்ச்சி என அனைத்து உணர்வுகளையும் எடுத்துக்காட்டுவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளது. இப்பாடல்களை சிலர் ஜெயதேவரின் ராகங்களைப் போலவும் பாடியிருக்கின்றார். சிலர் காலத்திற்கு ஏற்ப வேறு ராகங்களில் பாடுவதையும் காணமுடிகிறது. இன்று வெகு சிலரே இப்பாடல்களை பாரம்பரியம் மாறாது அரங்கேற்றி வருகின்றனர். (6)

**கீத சுந்தரம்**

கீதசுந்தரம்' என்னும் இவ்வஷ்டபதிகளை ஸ்ரீ சதாசிவ தீக்ஷிதர் இயற்றியுள்ளார். இவர் தஞ்சையை ஆண்ட துளஜா மகாராஜாவின் அரசவையில் ஆஸ்தான வித்வானாக இருந்த ஸ்ரீ சொக்கநாத தீட்சிதரின் சீடராவார். இவர் மிகவும் புகழ்பெற்ற கவிஞராக விளங்கினார். இவர் தேவி மீனாக்ஷி தன் பதி சொக்கனாதரை பிரிந்து மீண்டும் அடைந்ததை 24 அஷ்டபதிகளாக பாடியுள்ளார். இப்பாடல்கள் ஜெயதேவரின் கீத கோவிந்தத்தை பின்பற்றுவதாகவே உள்ளது. தோடி, பூபாளம், பந்துவராளி, வசந்தா போன்ற பல்வேறு ராகங்களையும், தாள வகைகளையும் கொண்டவையாக அமைந்துள்ளது. கூடுதலாக அமைந்துள்ள ஸ்லோகங்கள் அஷ்டப்பதியின் அர்த்தத்தை எடுத்துக்காட்டி, கதையை நகர்த்துக்கொண்டு போவதாகவும் அமைந்துள்ளது. மீனாக்ஷி

தேவி சுந்தரேஷ்வரரை பிரிந்ததும், பின் பிரிவு தாங்க முடியாததால் தவிப்பதும், மீனாக்ஷி தேவியின் தோழி மீனாக்ஷியை தேடி சுந்தரர் வருவதை பார்த்து தேவியிடம் தெரிவிக்க, பின் தம்பதிகளின் ஊடல், தோழிகளின் தூது, பின் இருவரும் இனைவதாக உள்ளது. பிரிவில் ஆரம்பித்து இறுதியில் சேர்வதை எடுத்துக்காட்டுவதாக ஆனந்தமாக அமைந்துள்ளது. இந்நூல் சிவ பெருமான் தேவியிடம் கொண்ட மாதுர்ய பக்தியை எடுத்துக்காட்டும் தனித்துவமான படைப்பாக விளங்குகிறது. (7)

**கீத ராகவம்**

ஸ்ரீ ராமரை மையமாக கொண்டு பல அஷ்டபதிகள் உள்ளன. உபநிடத பிரம்மம், ஹரிசங்கரா மற்றும் பிரபாகரன் போன்ற எழுத்தாளர்களால் எழுதப்பட்ட பல்வேறுபட்ட அஷ்டபதிகள் இருந்துள்ளது. அவற்றுல் கீத ராகவம் என்ற இந்த அஷ்டபதி இசை உலகில் அதிகம் அறியப்படாத சிறந்த படைப்பாகும். இதை இயற்றியவர் திருவிசநல்லூர் ராமகவி ஆவார். ராமகவி கோவிந்த தீட்சிதரின் புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்நூல் மொத்தம் 23 அஷ்டபதிகள் கொண்டது அவை ஐந்து ஸர்கங்களாக பகுக்கப்பட்டுள்ளது. இப்பாடல்களின் கருப்பொருள் ராமரின் வாழ்க்கையில் நடந்த முக்கியமான நிகழ்வுகளை காலவரிசைப்படி எடுத்துக்காட்டி முழு ராமா காவியத்தையும் கூறுவதாக உள்ளது. (8) இதன் இசை ஜெயதேவரின் பாடல் அமைப்பைப் போன்றே உள்ளது.

இவ்வாறாக சிக்க தேவராஜ உடையார் எனும் மைசூர் சாம்ராஜ்யத்தின் மன்னன், கன்னடத்தில் ஒரு சிறந்த அறிஞரும் இசைக்கலைஞரும் ஆவார். இவர் ஜெயதேவரின் அஷ்டபதியில் ஈர்க்கப்பட்டு கீத கோபாலா என்ற சப்தபதியை இயற்றினார். ஒவ்வொரு பகுதியும் ஏழு பாடல்களைக் கொண்டுள்ளது. இது இசை இலக்கியத்தின் புதுமையாகும். (9)

**முடிவுரை**

அஷ்டபதி என்னும் இசை வடிவம் இசை நாட்டிய வடிவமாக இருந்தாலும் இன்று பஜனை சம்பிரதாயத்தின் முக்கிய வடிவமாக உள்ளது. பொதுவில் ராதா கல்யாணம் மட்டுமே அனைவரும் அறிந்திருக்க, அதைப்போலவே சீதா கல்யாணம், மீனாட்சி கல்யாணம் போன்ற பல அஷ்டபதி வடிவங்கள் இருப்பது இசை உலகில் பலர் அறியாதிருப்பதை காண முடிகிறது. இவை நமது இசையின் பொக்கிஷங்களாகும். இப்படியாக உள்ள பல அறிய அஷ்டபதி வடிவங்களும் அடுத்த தலைமுறைக்கும் கற்பிக்கப்பட்டு பாரம்பரியம் மாறாது பாதுகாக்கப்பட வேண்டும்.

அடி குறிப்புகள்

1- https://vimarisanam.com/2017/02/23/%E0%AE%9C%E0%AF%86%E0%AE%AF%E0%AE%A4%E0%AF%87%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%85%E0%AE%B7%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%BF/

2- https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AF%80%E0%AE%A4_%E0%AE%95%E0%AF%8B%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D

3- https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AF%80%E0%AE%A4_%E0%AE%95%E0%AF%8B%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D

4- https://periva.proboards.com/thread/12397/overview-ashtapathi-jayadevar-geetha-govindam

5- https://sathvishayam.wordpress.com/2020/09/04/maruthanallur-swamigal/

6- http://indiatempletour.blogspot.com/2014/02/shiva-ashtapadi-prathama-ashtapadi-1.html?m=1

7- https://www.shastras.com/shiva-stotras/gita-sundaram/

8- Sanskrit Studies Centre Journal, Vol. 2, Silpakorn Universty, Bangkok, Thailand, 2006

9- https://en-academic.com/dic.nsf/enwiki/7121506